# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2150/68 - 2019 නොවැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.11.21

*2150/68 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 3/3/6/2/24.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

மழை மற்றும் மண்சரிவு காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கு மாற்றுக் காணி வழங்குவதற்காக காணி எடுத்துக்கொள்ளல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவிலே கொஹன்சிய பத்துவ சிறுபிரிவில், எனசல்மட கிராம அலுவலர் பிரிவில், எனசல்மட கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தளை சிரேஷ்ட நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட இல. மா 1698 இல் துண்டு இல. 01 இனால் காட்டப்பட்டுள்ள சுமார் 1.6387 ஹெக்டாயர் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் :

*01. துண்டு இல. 01*

காணியின் பெயர் : எனசல்மட வத்த; உரிமை கோருவோர் : அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 11, டியுக் வீதி, கொழும்பு 01; விஸ்தீரணம் : 1.6387 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு உக்குவலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். என். கே. சேரசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
உக்குவலை.

பிரதேச செயலகம்,
உக்குவலை,
2019, நவெம்பர் 14.

12 - 140


1A - G 31548 - 17 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.